පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
பொலிஸ் ஊடகப் பிரிவு
POLICE MEDIA DIVISION
14 ஆம் மாடி, சுகுறுபாய, பத்தரமுல்லை

දිනය திகதி Date	29.11.2025 நேரம் 1455 மணி	දුරකථන தொலைபேசி Telephone	011 - 2887973	මගේ අංකය எனது இலக்கம் My No	D/Media/out/2141/2025	ඊ මේල් மின்னஞ்சல் E-mail	dir.media@police.gov.lk

நாட்டில் ஏற்பட்டுள்ள அவசரகால அனர்த்த நிலை குறித்து தகவல் தெரிவிப்பதற்காக பொலிஸ்மா அதிபரின் விசேட செயற்பாட்டு மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள அவசரகால அனர்த்த நிலை காரணமாக பல இடங்களில் கனமழை, வெள்ளப்பெருக்கு, பலத்த காற்று மற்றும் மண்சரிவு அபாயங்கள் ஏற்பட்டுள்ளதுடன் சில பகுதிகளிலிருந்து பொதுமக்கள் வெளியேறும்படி அறிவிப்புகளும் தற்போது வெளியீடப்பட்டுள்ளன.

இந்த அவசரகால நிலைமை குறித்து உரிய ஒருங்கிணைப்பை பேணுவதற்கும் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கும் பொலிஸ்மா அதிபரின் மேற்பார்வையின் கீழ் பொலிஸ் தலைமையகத்தில் விசேட செயற்பாட்டு மையம் நிறுவப்பட்டுள்ளது.

தொலைபேசி இல	Whats App தொலைபேசி இல	மின்னஞ்சல் முகவரி
011 - 2013051 011 - 2027148 011 - 2027149 011 - 2472757 011 - 2430912	071 - 8595884 071 - 8595883 071 - 8595882 071 - 8595881 071 - 8595880	Igp.opsroom@police.gov.lk

மேலும் அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகளுக்கு முகங்கொடுக்கும் வகையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுக்களாக பொலிஸ் நிலையங்களில் தயார் நிலையில் உள்ளதுடன் உடனடி அறிவிப்பில் செயற்படக்கூடிய வகையில் படகு வசதிகள், உயிர்பாதுகாப்பு வீரர்கள் மற்றும் ஏனைய அனர்த்த நிலைமைகளுக்கான பாதுகாப்பு உபகரணங்களும் தயார் செய்யப்பட்டுள்ளன.

மேலும் இந்த அனர்த்த நிலைமைகளுக்கு முகங்கொடுக்கும் வகையில் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், முப்படையினர் உள்ளிட்ட ஏனைய தொடர்புடைய அனைத்து நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுடனும் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அனர்த்தம் இடம்பெற்ற இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்களின் வீடுகள் மற்றும் உடைமைகளைப் பாதுகாப்பதற்கான அவசியமான திட்டம், ஒவ்வொரு பொலிஸ் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்தவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு மற்றும் நலன்புரி வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கைப் பொலிஸ், முப்படையினர் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய உத்தியோகத்தர்களுடன் இணைந்து அனர்த்தங்களுக்கு உள்ளானவர்களை மீட்பது, நிவாரணம் வழங்குவதல், குறித்த பகுதிகளில் பாதுகாப்பை வழங்குவதல் போன்ற நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்து செயல்படுத்தத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு இலங்கைப் பொலிஸ் பொதுமக்களிடம் கோரிக்கை விடுப்பதுடன், மேலும் ஆபத்தான இடங்களுக்குச் செல்லுதல், அனர்த்தம் இடம்பெற்ற இடங்களைப் பார்வையிடச் செல்லுதல், வெள்ளத்தால் மூழ்கிய பாதைகளில் பாதுகாப்பற்ற முறையில் வாகனங்களை செலுத்துதல் உள்ளிட்ட அவதானமற்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்றும் இலங்கைப் பொலிஸ் பொதுமக்களுக்கு மேலதிகமாக அறிவுறுத்துகிறது.

பொலிஸ் ஊடகப் பிரிவு.